தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, தை 22, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 பிப்ரவரி 4, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு."

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. இரா. பஞ்சாட்சரம் அவர்கள் 21-9-2012 அன்றும், திரு. ஆர்.டி. அரங்கநாதன் அவர்கள் 6-11-2012 அன்றும், திரு. கே.ஆர். முனிரத்தினம் அவர்கள் 18-11-2012 அன்றும், திரு. நா. கிருஷ்ணன் அவர்கள் 18-11-2012 அன்றும், திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் 23-11-2012 அன்றும், டாக்டர் த. முகமது சலீம் அவர்கள் 23-11-2012 அன்றும், திரு. எஸ். செல்வராஜ் அவர்கள் 25-11-2012 அன்றும், திரு. மு. சத்தியமூர்த்தி அவர்கள் 3-12-2012 அன்றும், திரு. பெ. வேங்கா கவுண்டர் அவர்கள் 9-12-2012 அன்றும், திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் 21-12-2012 அன்றும், திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் 15-1-2013 அன்றும், திரு. கே.எம்.எம். மேதா அவர்கள் 24-1-2013 அன்றும், திரு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 27-1-2013 அன்றும் மற்றும் திரு. ஜி. நடராஜன் அவர்கள் 27-1-2013 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2013 பிப்ரவரி 4

திரு. இரா. பஞ்சாட்சரம் அவர்கள் 1989 முதல் 1991 வரை மேல்மலையனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ஆர்.டி. அரங்கநாதன் அவர்கள் 1991 முதல் 1996 வரை விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே.ஆர். முனிரத்தினம் அவர்கள் 1962 முதல் 1967 வரை ஆற்காடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. நா. கிருஷ்ணன் அவர்கள் 1977 முதல் 1980 வரை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் 1962 முதல் 1967 வரையிலும், 1967 முதல் 1971 வரையிலும், 1971 முதல் 1975 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் நான்கு முறை வீரபாண்டி தொகுதியிலிருந்தும், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் இரண்டு முறை சேலம்-2 தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள். மேலும், 1978 முதல் 1984 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1989 முதல் 1991 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

டாக்டர் த. முகமது சலீம் அவர்கள் 1985 முதல் 1988 வரை பெரியகுளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். செல்வராஜ் அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை சமயநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1996 முதல் 2001 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

2013 பிப்ரவரி 4] [பேரவைத் தலைவர்]

திரு. மு. சத்தியமூர்த்தி அவர்கள் 1971 முதல் 1976 வரை புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. பெ. வேங்கா கவுண்டர் அவர்கள் 1977 முதல் 1980 வரை வீரபாண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10-05

திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் 1967 முதல் 1971 வரை மதுராந்தகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்கள்.

திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் 1971 முதல் 1976 வரை ஈரோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. கே.எம்.எம். மேதா அவர்கள் 1967 முதல் 1971 வரை பெரியகுளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1980 முதல் 1984 வரை ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஜி. நடராஜன் அவர்கள் 1967 முதல் 1971 வரை காட்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [2013 பிப்ரவரி 4

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

திரு. ஐ.கே. குஜ்ரால், இந்திய முன்னாள் பிரதமர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

“சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பத்தில் பிறந்து மாணவப் பருவத்திலேயே அரசியலில் ஈர்க்கப்பட்டு, 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் பங்கேற்று நாட்டின் விடுதலைக்காகப் போராடி சிறை சென்றவரும், அர்ப்பணிப்பு, நேர்மை, தேசப்பற்றுடன் இந்திய நாட்டுக்காக சேவையாற்றியவரும், சிறந்த கவிஞரும், ஓவியருமான திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் தனது 92-வது வயதில் 30-11-2012 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவர் பாராளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினராகவும், சோவியத் ரஷ்யாவிற்கான இந்தியத் தூதராகவும், வெளியுறவுத் துறை மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராகவும், 1997 ஏப்ரல் முதல் 1998 மார்ச் வரை இந்திய நாட்டின் 12-வது பிரதமராகவும் பணியாற்றினார். இவர் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பணியாற்றியபோது அண்டை நாடுகளுடன் சுமுக உறவுக்கு கோட்பாடுகளை வகுத்து புகழ்பெற்றார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.”

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இம்மாமனிதருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.